# பொதுக்காலத்தின் பதினைந்தாம் ஞாயிறு

## மூன்றாவது திருவழிபாடு ஆண்டு

**இன்றைய வாசகங்கள்:**

**இணைச்சட்டம். 30:10-14, 1கொலோசையர 1: 15-20, லூக்கா 10:25-37**

## திருப்பலி முன்னுரை:

அடுத்திருப்பவர்களே, பொதுக்காலத்தின் பதினைந்தாம் ஞாயிறு திருப்பலியை சிறப்பிக்க உங்களை அன்போடு வரவேற்கிறோம். இறையன்பு மற்றும் பிறரன்பு கட்டளைகளை நம் வாழ்வில் செயல் படுத்த இன்றைய திருவழிபாடு நம்மை அழைக்கிறது. நம்மை நாமே நேர்மையாளர்களாக எண்ணிக் கொள்ளாமல், கடவுளின் முன்னிலையில் நாம் நேர்மையாளர்களாக இருக்க வேண்டும் என்பதே ஆண்டவரின் விருப்பம். இயேசுவின் வழியில், கடவுளுக்கும் மற்ற மனிதர்களுக்கும் அடுத்திருப்பவர்களாய் வாழ அழைக்கப்படுகிறோம். எரிகோ செல்லும் பாதையில் அடிபட்டுக் கிடந்தவரை கண்டுகொள்ளாமல் சென்ற யூத குருவையும், லேவியரையும் போன்று மனிதநேயம் இல்லாதவர்களாய் நடந்துகொண்ட தருணங்களுக்காக மன்னிப்பு வேண்டுவோம். நல்ல சமாரியரைப் போன்று, தேவையில் இருப்பவர்களுக்கு உதவிக்கரம் நீட்டுபவர்களாய் வாழ வரம் வேண்டி, இத்திருப்பலியில் பங்கேற்போம்.

# விசுவாசிகள் மன்றாட்டுகள்:

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

**1. ஒப்புரவாக்க அழைப்பவராம் இறைவா,**

கிறிஸ்துவின் நற்கருணைப் பலியை நிறைவேற்றும் எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் அனைவரும், உலக மக்களை உம்மோடு ஒப்புரவாக்கும் பணியை சிறப்பாக ஆற்றும் வரத்தினை வழங்கிட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**2. அன்புசெய்ய அழைப்பவராம் இறைவா,**

உலகெங்கும் சிற்றின்ப ஆசைகளில் மூழ்கி, எந்திரங்களோடு பொழுதைக் கழித்துக் கொண்டிருக்கும் மக்கள், குடும்ப உறுப்பினர்களையும் அருகில் வசிப்பவர்களையும் அன்பு செய்து வாழும் மனநிலையை வழங்கிட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**3. பொன்னினும், பசும் பொன்னினும் மேலாக விலைமிக்க வார்த்தைகளால் எம்மை வாழ்விக்கும் தந்தையே!**

உமது வாழ்வு தரும் வார்த்தைகளையும், எம் இதயத்தை மகிழ்விக்கும் உமது நியமங்களையும் ஏற்று அதன்படி வாழவும், பிறருக்குப் பணி யாற்றுவதன் வழியாக உமது பணியை நிறைவாக்கவும், எமக்கு வேண்டிய அருளை அளித்துக் காத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**4. உதவிபுரிய அழைப்பவராம் இறைவா,**

உலகின் பல பகுதிகளில் உடல் மற்றும் மனக் காயங்களால் அமைதி இழந்து வேதனையுறும் மக்களை குணப்படுத்த உழைக்கும் நல்லுள்ளம் கொண்டவர்கள் பெருக உதவிட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**5. தாழ்ச்சியின் மாதிரிகையே தந்தையே இறைவா!**

தம்மை நேர்மையாளர் எனக் காட்டிக்கொண்டு, மக்களை தவறான பாதையில் அழைத்துச் செல்லும் அரியணையில் அமர்வோர், தலைமை தாங்குவோர், ஆட்சியாளர், அதிகாரம் கொண்டோர் ஆகிய அனை வரும் தங்கள் தீய போக்கிலிருந்து மாறி உண்மையின் வழிக்குத் திரும்பிடச் செய்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.